அமீரகம்-ஓமன் செய்திகள்

சினிமா செய்திகள்

10-ம் பக்கம்

சர்வதேச போக்குவரத்து தினத்தையொட்டி

மஸ்கட் அரசு பஸ்களில் பொதுமக்கள் இலவச பயணம்

மஸ்கட், ஏப்.19-

மஸ்கட் மவசலாத் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சர்வதேச போக்குவரத்து தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 17-ந் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி ஓமன் அரசின் போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் நேற்று முன்தினம் மஸ்கட்டில் இயக்கப்படும் அரசு பஸ்களில் பொதுமக்கள் ஒரு நாள் மட்டும் இலவசமாக பயணம் செய்யலாம் என அனுமதி வழங்கப்பட்டது. தொடர்ந்து பொதுமக்கள் மஸ்கட்டில் அரசு பஸ்சை அதிகம் பயன்படுத்தும் குடியிருப்பு, தொழிற்பேட்டை, வர்த்தக பகுதிகளுக்கு பஸ் இயக்கப்பட்டது. இதனையடுத்து ஏராளமான பொதுமக்கள் அரசு பஸ்களில் ஆர்வமாக பயணம் செய்தனர். இதனால் பஸ்களில் கூட்டம் நிரம்பி வழிந்தது. தொடர்ந்து அரசு போக்குவரத்து சேவை குறித்த விழிப்புணர்வு மஸ்கட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

துபாயில், ஓட்டலுக்கு திடீரென வருகை புரிந்த அமீரக துணை அதிபர்

சமூக வலைத்தளத்தில் வீடியோ வைரல்

துபாய், ஏப்.19-

அமீரக துணை அதிபரும், பிரதமரும், துபாய் ஆட்சியாளருமான மேதகு ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் துபாயில் உள்ள ஒரு ஓட்டலுக்கு நேற்று திடீரென வருகை புரிந்தார். ஓட்டலில் சாதாரணமாக வருகை புரிந்த துணை அதிபரை பார்த்து சாப்பிட்டு கொண்டு இருந்த பொதுமக்கள் இன்ப அதிர்ச்சி அடைந்தனர். அப்போது பொதுமக்கள் அனைவரும், நாங்கள் உங்களை விரும்புகிறோம், மிக்க நன்றி என கூறினர். அதற்கு துணை அதிபரும் 'சுக்ரன்' என அரபி மொழியில் நன்றி கூறுவதும் இடம் பெற்றுள்ளது.

இதுதொடர்பான வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. மத்திய கிழக்கு பகுதியில் நிலவும் பதற்றம் காரணமாக பொதுமக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அமீரக தலைவர்கள் தொடர்ந்து ஓட்டல்கள், வணிக வளாகங்களுக்கு வந்து செல்கின்றனர்.

கடந்த மாதம் அமீரக துணை பிரதமரும், துபாய் பட்டத்து இளவரசருமான மேதகு ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷித் அல் மக்தூம் துபாய் வணிக வளாகத்துக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

புஜ்ஜேரா துறைமுகத்தில் அமீரக அதிபர் மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் ஆய்வு செய்தபோது எடுத்த படம். அருகில் புஜ்ஜேரா ஆட்சியாளர் மேதகு ஷேக் ஹமத் பின் முகம்மது அல் சர்கி உடன் இருந்தார்.

புஜ்ஜேராவில்

அமீரக அதிபர் ஆட்சியாளருடன் சந்திப்பு

துறைமுகத்தை ஆய்வு செய்தார்

புஜ்ஜேரா, ஏப்.19-

புஜ்ஜேராவில் அமீரக அதிபர் மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் புஜ்ஜேரா ஆட்சியாளர் மேதகு ஷேக் ஹமத் பின் முகம்மது அல் சர்கியை சந்தித்து பேசினார். அதன் பின்னர் அமீரக அதிபர் அங்கு உள்ள துறைமுகத்தை ஆய்வு செய்தார்.

வடக்கு அமீரக பகுதிகளில் சுற்றுப்பயணம்

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நடந்து வந்த போரின் காரணமாக அமீரகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஈரான் ஏவுகணை மற்றும் டிரோன்கள் மூலம் தாக்குதல்களை நடத்தியது. இந்த தாக்குதல் காரணமாக அமீரகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள முக்கிய கட்டிடங்கள், துறைமுக பகுதிகள், எரிசக்தி நிலையங்கள் பாதிக்கப்பட்டது. தற்போது பேச்சுவார்த்தை காரணமாக தற்காலிகமாக போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அமீரக அதிபர் மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் வடக்கு அமீரக பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். தொடர்ந்து அவர் நேற்று முன்தினம் அஜ்மான் வந்தார். அப்போது அமீரக அதிபரை அஜ்மான் ஆட்சியாளர் மேதகு ஷேக் ஹுமைத் பின் ராஷித் அல் நுயைமி சந்தித்து பேசினார்.

ஆய்வு

இதனைத்தொடர்ந்து அமீரக அதிபர் புஜ்ஜேராவுக்கு சென்றார். அங்கு அவருக்கு புஜ்ஜேரா ஆட்சியாளர் மேதகு ஷேக் ஹமத் பின் முகம்மது அல் சர்கி தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து அவர் அமீரகத்தில் உள்ள முக்கியமான துறைமுகங்களில் ஒன்றான புஜ்ஜேரா துறைமுகத்துக்கு சென்றார். இந்த துறைமுகத்தில் இருந்து உலகின் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி நடைபெறுகிறது. இதனால் உலக வர்த்தகத்துக்கும், அமீரகத்தின் தேசிய பொருளாதாரத்துக்கும் இந்த துறைமுகம் முக்கிய பங்கை வகித்து வருகிறது. புஜ்ஜேரா துறைமுகத்துக்கு சென்ற அதிபரை துறைமுகத்தின் அதிகாரிகள் சிறந்த முறையில் வரவேற்றனர்.

இதனையடுத்து அதிகாரிகள் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அவரிடம் விவரித்தனர். தொடர்ந்து இந்த துறைமுகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளை ஆய்வு செய்தபின், அங்கு பணிகள் தங்கு தடையின்றி நடைபெறுவதற்கு அதிபர் பாராட்டு தெரிவித்தார்.

புஜ்ஜேரா ஆட்சியாளருடன் சந்திப்பு

இதனையடுத்து அமீரக அதிபர் புஜ்ஜேராவில் உள்ள அரண்மனையில் ஆட்சியாளர் மேதகு ஷேக் ஹமத் பின் முகம்மது அல் சர்கியை சந்தித்து பேசினார். அப்போது இருவரும் பரஸ்பர நலம் விசாரித்து கொண்டனர். தொடர்ந்து புஜ்ஜேராவில் இருந்து வரும் பொருளாதார நிலவரம், மக்களின் வாழ்க்கைத்தரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் தொடர்பாக விவாதித்தனர். மேலும் தேசிய முன்னுரிமை திட்டத்தின் அடிப்படையில் குடிமக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து பேசினார்கள்.

இந்த சந்திப்பின்போது புஜ்ஜேரா பட்டத்து இளவரசர் மேதகு ஷேக் முகம்மது பின் ஹமத் பின் முகம்மது அல் சர்கி, அமீரக அதிபர் அலுவலக சிறப்பு விவகாரத்துறையின் துணைத்தலைவர் ஷேக் ஹம்தான் பின் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான், அமீரக அதிபரின் ஆலோசகர் ஷேக் முகம்மது பின் ஹமத் பின் தக்னூன் அல் நஹ்யான், ஷேக்குகள், மந்திரிகள், அரசு உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தற்காலிகமாக போர் நிறுத்தம் எதிரொலி:

துபாய் குளோபல் வில்லேஜ் கண்காட்சி மீண்டும் நாளை முதல் திறப்பு

நிர்வாகம் தகவல்

துபாய், ஏப்.19-

மத்திய கிழக்கு பகுதியில் தற்காலிகமாக போர் நிறுத்தம் எதிரொலியாக துபாய் குளோபல் வில்லேஜ் கண்காட்சி பொதுமக்கள் பார்வைக்காக மீண்டும் நாளை (திங்கட்கிழமை) முதல் திறக்கப்படுகிறது என்று குளோபல் வில்லேஜ் கண்காட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நிர்வாகம் வெளியிட்டுள்ள தகவலில் கூறியிருப்பதாவது:-

குளோபல் வில்லேஜ் கண்காட்சி

துபாயில் முக்கியமான பொழுது போக்கு மையமாக குளோபல் வில்லேஜ் கண்காட்சி திகழ்ந்து வருகிறது. இந்த கண்காட்சி ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு வகையான பொழுதுபோக்கு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தற்போது இந்த கண்காட்சி 30-வது ஆண்டாக கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 15-ந் தேதி பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது. இந்த கண்காட்சியில் அமீரகம், சவுதி அரேபியா, இந்தியா, பக்ரைன், குவைத், ஜப்பான், யேமன், ரஷியா, பாகிஸ்தான், மொராக்கோ உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட நாடுகள் அரங்குகளை அமைத்துள்ளனர்.

இதில் ஒவ்வொரு நாடுகளும் தங்களது நாட்டின் முக்கிய தகவல்கள், பாரம்பரிய சின்னங்கள், உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனையகங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு நாட்டின் அரங்கிலும் அந்த நாட்டைச் சேர்ந்த பாரம்பரிய, கலாசார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

மீண்டும் திறப்பு

கடந்த பிப்ரவரி மாதம் 28-ந் தேதி மத்திய கிழக்கு பகுதியில் நிலவிய போர் பதற்றம் காரணமாக பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கண்காட்சி தற்காலிகமாக மூடப்பட்டது. தற்போது தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளதால் குளோபல் வில்லேஜ் கண்காட்சி நாளை (திங்கட்கிழமை) மாலை 5 மணி முதல் மீண்டும் பொதுமக்கள் பார்வைக்கு திறக்கப்படும். தினமும் மாலை 5 மணி முதல் இரவு 12 மணி வரை கண்காட்சியை பார்வையிடலாம்.

இந்த கண்காட்சியை பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் பார்வையிடும் வகையில் துபாயில் ரசிதியா, யூனியன் மெட்ரோ நிலையம், அல் குபைபா பஸ் நிலையம் மற்றும் மால் ஆப் தி எமிரேட்ஸ் பஸ் நிலையம் ஆகிய இடங்களில் இருந்து பஸ் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மகிழ்ச்சி

குளோபல் வில்லேஜ் கண்காட்சி மீண்டும் திறக்கப்படுவதால் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

உலக கலை தினத்தையொட்டி

துபாயில், ஓவியப்போட்டி; தமிழக மாணவர்கள் பங்கேற்பு

துபாய், ஏப்.19-

உலக கலை தினத்தையொட்டி துபாய் அல் ஜதாப் பகுதியில் உள்ள முகம்மது பின் ராஷித் நூலகத்தில் பொதுமக்கள் உள்ளிட்ட கலைஞர்கள் நேரடியாக ஓவியம் வரையும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் அமீரகம் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஓவிய கலைஞர்கள், சிறுவர்கள் மற்றும் மாணவ-மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இதில் துபாயில் உள்ள பள்ளிக்கூடத்தில் 12-ம் வகுப்பு படித்து வரும் சுஜிதாபிரியா செந்தில்குமார், 10-ம் வகுப்பு மாணவர் ஷரத்விக்னேஷ் செந்தில்குமார் ஆகிய தமிழக மாணவர்கள் பங்கேற்று நேரடியாக ஓவியங்களை வரைந்து அசத்தினர்.

கலைஞர்கள் நேரடியாக தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி, உலக ஒற்றுமை, கலாசார அடையாளத்தை வெளிப்படுத்தும் படைப்புகளை உருவாக்கினர். தமிழக மாணவர்களின் படைப்புகள், உலக எல்லைகளையும் தாண்டி மனிதர்களை கலைகளின் மூலம் இணைக்கும் வகையில் அமைந்திருந்ததாக அதிகாரிகள் பாராட்டு தெரிவித்தனர்.

நேரடி பாட வகுப்புகள் நாளை முதல் தொடக்கம்:

அமீரகத்தில் பள்ளிக்கூட பஸ்கள் மீண்டும் இயக்கப்படும்

கல்வி அமைச்சகம் அறிவிப்பு

அபுதாபி, ஏப்.19-

அமீரகத்தில் உள்ள பள்ளிக்கூடங்கள், கல்வி நிறுவனங்களில் நேரடி பாட வகுப்புகள் நாளை (திங்கட்கிழமை) தொடங்க உள்ள நிலையில் பள்ளிக்கூட பஸ்கள் மீண்டும் இயக்கப்படும் என உயர்கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சித் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

அரசின் கவனத்துக்கு...

மத்திய கிழக்கு போர் பதற்றம் காரணமாக பாதுகாப்பு காரணங்களுக்காக அமீரகத்தில் உள்ள அனைத்து பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆன்லைன் மூலம் வகுப்புகளை நடத்த கடந்த மார்ச் மாதம் 2-ந் தேதி முதல் உத்தரவிடப்பட்டது. இதைத்தொடர்ந்து கல்வி மையங்களில் படிக்கும் மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே ஆன்லைன் வகுப்புகளில் கலந்துகொண்டனர். தற்போது மீண்டும் இயல்பு நிலை எட்டியதை அடுத்து அனைத்து பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் நாளை (திங்கட்கிழமை) முதல் நேரடி பாட வகுப்புகள் தொடங்குகிறது.

பள்ளிக்கூடங்களில் நேரடி பாட வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டாலும் பாதுகாப்பு காரணங்களை கருத்தில் கொண்டு பள்ளிக்கூட பஸ்கள் தற்காலிகமாக இயங்காது என அறிவிக்கப்பட்டது. எனினும் நிலைமையை ஆய்வு செய்து பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால் பெற்றோர்களிடையே தங்களது குழந்தைகள் எவ்வாறு பள்ளிக்கூடம் செல்வார்கள் என்ற கேள்வி எழுந்தது. இது தொடர்பாக அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

பஸ்களை இயக்க அனுமதி

இதனையடுத்து தேசிய அவசரம், நெருக்கடி மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையம், அமீரக கல்வி அமைச்சகத்துடன் ஒருங்கிணைந்து ஆலோசனை மேற்கொண்டது. இந்த ஆலோசனையை தொடர்ந்து அமீரகத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பள்ளிக்கூடங்கள் பஸ்களை மீண்டும் இயக்க அனுமதி அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பள்ளிக்கூட வளாகங்களிலும், போக்குவரத்து நிறுவனங்களிலும் நிறுத்தப்பட்டுள்ள பஸ்கள் ஒவ்வொன்றிலும் பள்ளிக்கூட அலுவலர்கள், துபாய் சாலை மற்றும் போக்குவரத்து ஆணைய அதிகாரிகள் தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அப்போது பஸ்சில் உள்ள அனைத்தும் சரியாக செயல்படுகிறதா? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பராமரிப்பு தேவைப்படும் வாகனங்களுக்கு அதற்கான பரிந்துரை வழங்கப்பட்டது. எனவே பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பாதுகாப்பான முறையில் அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மகிழ்ச்சி

பள்ளிக்கூடத்தில் நேரடி பாட வகுப்புகள் மீண்டும் நாளை தொடங்க உள்ள நிலையில் பஸ்கள் இயக்கப்படாது என அறிவித்ததால் பெற்றோர்கள் கவலையடைந்தனர். தற்போது பள்ளிக்கூட பஸ்கள் மீண்டும் இயக்கப்படும் என தெரிவித்துள்ளதால் அவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அபுதாபியில்

சமூக ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் ஒட்டம்

25 ஆயிரம் பேர் ஆர்வத்துடன் பங்கேற்பு

அபுதாபி, ஏப்.19-

அமீரகத்தின் சமூக ஒற்றுமை, ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அமீரக தலைநகர் அபுதாபியில் 'நாட்டுக்காக ஓட்டம்' என்ற தலைப்பில் சிறப்பு ஓட்டப்போட்டி நடந்தது. இந்த போட்டி வகாத் அல் கராமாவில் தொடங்கி, அபுதாபி ஆயுதப்படை அலுவலர் சங்கத்தில் நிறைவடைந்தது. இந்த போட்டியில் பொதுமக்கள் தேசிய கொடியுடன் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இதில், சுமார் 25 ஆயிரம் பேர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து அமீரக ராஜாங்க மந்திரி நூரா அல் காபி கூறுகையில், "அமீரகத்தின் வலிமையை வெளிப்படுத்தும் வகையில் இது அமைந்திருந்தது" என்றார்.

இந்த போட்டியை ஜாயித் தன்னார்வ அமைப்பு, அபுதாபி விளையாட்டு கவுன்சில், ஷேக் ஜாயித் பெரிய பள்ளிவாசல் மையம், வகாத் அல் கராமா உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

போர் நிறுத்தத்துக்கு பிறகு

துபாயில் இருந்து திருச்சிக்கு மீண்டும் விமான சேவை தொடங்கியது

பயணிகள் மகிழ்ச்சி



துபாய், ஏப்.19-

போர் நிறுத்தத்துக்கு பிறகு துபாயில் இருந்து திருச்சிக்கு மீண்டும் விமான சேவை தொடங்கியது. இதனால் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

விமான சேவை

மத்திய கிழக்கு போர் பதற்றம் காரணமாக அமீரகத்திற்கு வெளிநாட்டு விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இதில் இந்தியாவில் இருந்து விமான சேவை அளித்து வரும் ஏர் இந்தியா, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ், ஸ்பைஸ் ஜெட், இண்டிகோ போன்ற நிறுவனங்கள் கடந்த பிப்ரவரி 28-ந் தேதி முதல் முழு வர்த்தக ரீதியிலான சேவைகளையும் ரத்து செய்தன.

இதில், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் சிறப்பு விமானங்கள் இயக்கப்பட்டு வந்தது. போர் பதற்றம் தீவிரமடைந்ததால் அந்த சேவையும் முழுமையாக ரத்து செய்யப்பட்டது. முன்னதாக வருகிற மே மாதம் 1-ந் தேதி முதல் முழுமையான சேவைகள் தொடங்கும் என அந்த நிறுவனம் அறிவித்திருந்தது.

பயணிகள் மகிழ்ச்சி

இந்த நிலையில் மீண்டும் நேற்று முதல் துபாயில் இருந்து திருச்சி செல்லும் ஏர் இந்தியா விமான சேவை தொடங்கியது. இதற்கான இணையதள முன்பதிவும் தொடங்கப்பட்டது. கட்டணம் சற்று அதிகமாக இருந்தாலும் மீண்டும் திருச்சிக்கு நேரடி விமான சேவை அமீரகத்தில் இருந்து தொடங்கியதால் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தற்போது மீண்டும் விமான சேவை தொடங்கியதால் பயணிகளுக்கு இருந்து வந்த சிரமம் குறைந்துள்ளது.

துபாயில் இருந்து சர்வதேச விமான நிலைய முனையம் 2-ல் இருந்து ஐ.எக்ஸ் -6622 ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் நேற்று அமீரக நேரப்படி மாலை 3.55 மணிக்கு புறப்பட்டது. இந்த விமானத்தில் செல்ல இருந்த பயணிகள் அனைவரும் தங்களது உடமையுடன் 3 மணி நேரம் முன்னதாக விமான நிலையம் வந்தனர். அவர்கள் அனைவரும் சோதனை செய்யப்பட்டு பயணம் செய்ய அனுப்பி வைக்கப்பட்டனர். இந்திய நேரப்படி இரவு 8 மணிக்கு திருச்சி விமான நிலையத்துக்கு சென்றது. அவர்களை பயணிகளின் உறவினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

மதுரைக்கு எப்போது?

இந்த விமானம் மறுமார்க்கத்தில் திருச்சியில் இருந்து மதியம் 12.10-க்கு புறப்பட்டு பிற்பகல் 2.55 மணிக்குதுபாய் சர்வதேச விமான நிலையத்திற்கு விமான சேவை அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் துபாயில் இருந்து மாலை 3.55 மணிக்கு விமானம் இயக்கப்படும். இதனால் பயணிகள் ஆர்வத்துடன் முன்பதிவு செய்து வருகின்றனர்.

துபாயில் இருந்து மதுரைக்கு ஸ்பைஸ் ஜெட் விமான நிறுவனம் நேரடி விமான சேவையை இயக்கி வந்தது. இந்த விமான சேவையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்த விமான சேவை மீண்டும் எப்போது தொடங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு பயணிகள் மத்தியில் எழுந்துள்ளது. மேலும் இண்டிகோ உள்பட விமான நிறுவனங்களின் முழுமையான சேவை தொடங்கப்பட வேண்டும் என ஆவலாக இருந்து வருகின்றனர்.

அமீரகத்தை சுற்றி...

அபுதாபி

★ பெனின் நாட்டின் அதிபர் தேர்தலில் ரோமுவால்ட் வதாக்னி வெற்றி பெற்று புதிய அதிபராக தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு அமீரக அதிபர் மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும் அமீரகதுணை அதிபரும், பிரதமரும், துபாய் ஆட்சியாளருமான மேதகு ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் மற்றும் அமீரக துணை அதிபரும், துணை பிரதமரும், அதிபர் அலுவலக தலைவருமான மேதகு ஷேக் மன்சூர் பின் ஜாயித் அல் நஹ்யான் ஆகிய இருவரும் தனித்தனியே அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

★ காங்கோ நாட்டின் தலைநகர் பிரச்சாவில்லேவில் நடைபெற்ற புதிய அதிபர் டெனிஸ் சசூ நிகுஎஸ்ஸோ பதவியேற்பு விழாவில் அமீரக அதிபர் சார்பில் அமீரக ராஜாங்க மந்திரி ஷேக் சேக்பூத் பின் நஹ்யான் அல் நஹ்யான் பங்கேற்றார்.

துபாய்

★ துபாயில் அமீரகப் பிரமுகர் ஹுசைன் மசூத் ஹாதி அல் அக்பாபி மறைவையடுத்து அவரது குடும்பத்தினருக்கு அமீரக துணை அதிபரும், பிரதமரும், துபாய் ஆட்சியாளருமான மேதகு ஷேக் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் மற்றும் அமீரக ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் ஷேக் மன்சூர் பின் முகம்மது பின் ராஷித் அல் மக்தூம் நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தனர்.

★ கடந்த (2025) ஆண்டில் மட்டும் துபாய் அல் ஜலிலா அறக்கட்டளையின் சார்பில் நோயாளிகள் 2,800 பேருக்கு, ஒரு கோடியே 62 லட்சம் திர்ஹாம் மதிப்பிலான மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

சார்ஜா

★ சார்ஜா கலாசார பேரவையின் சார்பில் நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் ஜோர்டான் நாட்டில் இருந்து வந்த இலக்கிய ஆளுமைகள் கவுரவிக்கப்பட்டனர்.

சர்வதேச கொலை, கொள்ளை வழக்குகள்:

அயர்லாந்து நாட்டை சேர்ந்தவர் துபாயில் கைது

துபாய், ஏப்.19-

அயர்லாந்து நாட்டை சேர்ந்தவர் டேனியல் கினகன். இவர் மீது பல்வேறு பிரிவுகளில் கொலை, கொள்ளை தொடர்பான குற்ற வழக்குகள் அயர்லாந்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர் அந்நாட்டில் இருந்து தப்பித்து தலைமறைவாகினார். இவரை எல்லை தாண்டிய சர்வதேச குற்றங்களில் தேடப்படும் நபராக அயர்லாந்து போலீஸ்துறை அறிவித்து சர்வதேச போலீஸ் அமைப்பான இண்டர்போல் உதவியை நாடினர். அவர் துபாயில் பதுங்கி இருப்பதாக இண்டர்போல் அமைப்புக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அவர்கள் உடனே துபாய் போலீசாரின் உதவியை நாடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் அயர்லாந்து அதிகாரிகளிடம் இருந்து அமீரக நீதி அமைச்சகத்தின் சர்வதேச ஒத்துழைப்பு பிரிவுக்கு சர்வதேச கைது வாரண்ட் அனுப்பப்பட்டது. இதனை பெற்றுக்கொண்ட துபாய் போலீசார் 48 மணி நேரத்தில் டேனியல் கினகனை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தினர்.

அப்போது அவரை அயர்லாந்து போலீஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்து நாடுகடத்த கோர்ட்டு உத்தரவிட்டது. இதையடுத்து டேனியல் கினகனை சர்வதேச விமான நிலையத்தில் அயர்லாந்து போலீஸ் அதிகாரிகளிடம் துபாய் போலீசார் ஒப்படைத்தனர்.

இன்றைய நிகழ்ச்சி

★ வர்த்தக வாய்ப்புகள் தொடர்பான ஆலோசனை கூட்டம்; இடம்-டைம் பிளாசா, அல் கிசஸ், துபாய். நேரம்-மதியம் 2.30 மணி.

★ வரலாற்றுக்கு முந்தையகத்தார் தொடர்பான கண்காட்சி; இடம்-சார்ஜா அகழ்வாராய்ச்சி அருங்காட்சியகம், சார்ஜா. நேரம்-காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை.

இன்றைய வானிலை

அமீரகம், ஓமனில் வானம் தெளிவாகவும், காணப்படும்.

அமீரக வெப்பநிலை:

அதிகபட்சம் - 28 செல்சியஸ்

ஓமன் வெப்பநிலை:

அதிகபட்சம் - 31 செல்சியஸ்

அபுதாபியில், சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு தேர்வில் சிறப்பிடம் பெற்ற தமிழக மாணவி

அபுதாபி, ஏப்.19-

அபுதாபியில் உள்ள தனியார் பள்ளிக்கூடத்தில் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் சஜினி வரதராஜன் 10-ம் வகுப்பு படித்து வந்தார். கடலூர் மாவட்டத்தை பூர்வீகமாக கொண்ட இவர் அபுதாபியில் பெற்றோருடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில் பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதில் சஜினி வரதராஜன் 99.8 சதவீத மதிப்பெண்கள் பெற்று பள்ளிக்கூட அளவிலும், மண்டல அளவிலும் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

பத்தாம் வகுப்பு தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவிக்கு பள்ளிக்கூட முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.